செ.வெ.எண்:59 நாள்:21.11.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டங்களின் கீழ் அங்கன்வாடி தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.11.2019) கொண்டாடப்பட்டது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று ( 21.11.2019) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மற்றும் சைல்டு லைன் ஊரக சமுதாய மேம்பாட்டு திட்டம் சார்பாக அங்கன்வாடி தின விழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து ஊட்டசத்து மற்றும் சிறுதானிய உணவு கண்காட்சியை பார்வையிட்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்பொழுது:**

அங்கன்வாடி பணியாளர்கள் அனைவருக்கும் அங்கன்வாடி தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அங்கன்வாடி பணியாளர்கள் குழந்தைகளுக்கும், மழலை செல்வங்களுக்கும் ஏற்படுகின்ற உடல் உபாதைகளை கண்டுபிடித்து அவர்களை நல்ல முறையில் பராமரித்து வருகிறீர்கள். அரசின் பிறதுறை பணிகளான கணக்கெடுப்பு, புள்ளி விவரங்கள், வாக்காளர் சரிபார்க்கும் பணி, தேர்தல் பணிகள் என கூடுதலாக பல்வேறு பணிகளை சிறப்பாக செயல்படுத்துகிறீர்கள். இவ்வாறு பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிக்கு வரும் குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி மின் விளக்கு, மின் விசிறி (பேன்), கழிப்பறை வசதி, குடிநீர் வசதிகளை தங்கு தடையின்றி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக அடிப்படை வசதிகள், வாடகை கட்டிடத்தில் இயங்கும் அங்கன்வாடி மையங்கள் குறித்து கோரிக்கை வந்தாலும் உடனடியாக புதிய கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஆர்காடு தொண்டு நிர்வாக இயக்குநர் திரு.கேசவராஜ், குழந்தை பாதுகாப்பு அலுவலர் திரு.சரவணன், தொண்டு நிருவண பிரதிநிதிகள் திரு.வின்சன் சுந்தர்ராஜ், திரு.ஜலாலுதீன், திரு.ஞானசேகரன், திருமதி.பிரசன்னகுமாரி, புள்ளியியல் அலுவலர் திரு.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு.பன்னீர்செல்வம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருமதி நித்யா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**